முற்பகல் 11-35

7. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2011-2012."

8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011-2012, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011-2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-3-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2011-2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.